தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளுக்கானது,

**வடக்கு மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவை 3I(அ) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பிரயோகப் பரீட்சை - 2023**

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் 30.03.2024 ஆம் திகதி நடாத்தப்பட்ட மேற்படி போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் 24.04.2024, 25.04.2024 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட பொது நேர்முகத் தேர்வின் அடிப்படையில் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் பிரயோகப் பரீட்சைக்கு தகைமை பெற்ற 727 விண்ணப்பதாரர்களின் பெயர்ப்பட்டியல் கீழே இணைக்கப்பட்டுள்ளது. இப் பிரயோகப் பரீட்சையினை கீழ்வரும் முறையில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**பிரயோகப் பரீட்சை நடைபெறும் தினங்கள் :** 2024 மே மாதம் 13, 14, 15 ஆம் திகதிகள்

**இடம் :**

1. முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு,வ.மா கனகபுரம் வீதி, கிளிநொச்சி
2. திறன் விருத்தி நிலையம், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி (டிப்போச் சந்தி அருகாமை)

தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு பிரயோகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பிரயோகப் பரீட்சை தொடர்பாக மேலதிக விபரங்களை கீழே குறிப்பிடப்படும் இணைப்பு I, இணைப்பு II இல் பார்வையிட முடியும் என்பதுடன் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் **தேசிய அடையாள அட்டை / செல்லுபடியாகும் கடவுச்சீட்டுடன்** குறித்த தினத்தில் ஒதுக்கப்பட்ட நேரத்தில் சமுகமளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ம.பற்றிக் டிறஞ்சன்

செயலாளர்

tamilguru.lk